# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## அவசரக் கூட்ட அறிவிப்பு

20.01.2020–ம் தேதி திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

001. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 03.01.2020 ஆய்வு கூட்ட அறிவுரைகளுக்கு இணங்க திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேத்பட்டு ரோடு விரிவாக்கம் செய்யப்பட்ட லட்சுமிநகர் பகுதியில் மற்றும் இதர பகுதியில் ரூ. 108.12 மதிப்பீட்டில் தார்சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை போன்ற பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | சிப்பம் எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | வந்தவாசி நகரம், வார்டு–19, சேத்பட்ரோடு, லட்சுமிநகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய தார்சாலை அமைக்கும் பணி | 49 . 00 |
| 2 | 1 | வந்தவாசி நகரம், வார்டு–6, KSK நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 20 . 00 |
| 3 | 1 | வந்தவாசி நகரம், வார்டு –24 மற்றும் கம்மாளத்தெரு, திருநீலகண்டபுரம் மற்றும் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய தார்சாலை அமைக்கும் பணி. | 25 . 00 |
| 4 | 1 | வந்தவாசி நகரம் வார்டு எண்.18 பெரிய காலனியில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் அமைத்தல் பணி. | 9 . 80 |
| 5 | 1 | வந்தவாசி நகரம் வார்டு எண்.6 கே.எஸ்.கே நகர் குறுக்கு தெருவில் சிமெண்ட்சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 4 . 32 |
| | | மொத்தம் | 108 . 12 |

**அலுவலக குறிப்பு–**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.0027/2020/இ1, நாள்.06.01.2020)

002.வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் பழமைவாய்ந்த குடிசை வீடுகள், மண்வீடுகள், இயற்கை சீற்றத்தால் இடிந்து விட்ட நிலையில் இவ்வீடுகளின் உரிமையாளர்கள் விலாசம் தெரியாத நிலையிலும் நாளது வரை உரிமையாளர்களின் விலாசமும் தெரியாததால் இணைப்பில் கண்டவாறு குடிநீர் இணைப்புகளின் கேட்பு தொகை வருடாவருடம் தொடர்ந்து வருவதாலும் குடிநீர் இணைப்புகள் இணைப்பை துண்டிப்பு செய்யப்பட்டு பல ஆண்டுகள் குறிப்பாக (30 வருடங்கள்) கடந்து விட்ட நிலையில் சட்டப்பூர்வமான வசூலிக்க இயலாத நிலையில் பட்டியலில் கண்ட தொகை ரூ.7,10,130/– தள்ளுபடி செய்திட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் பதிவு செய்யலாம்.

நிர்வாக நலன் கருதியும் குடிநீர் இணைப்புதாரர்களின் விலாசமும், தெரியாததாலும், (30 ஆண்டுகளுக்கு மேலாக) குடிநீர் கட்டணம் கேட்புத்தொகை ரூ.7,10,130/– மன்றம் தள்ளுபடி செய்ய மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண். /2019/இ1, நாள்.20.01.2020)

003. வந்தவாசி நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதார பணியாளர்களுக்கும் மற்றும் குடிநீர் திட்ட பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரவு காவலர்களுக்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கு பொங்கல் பண்டிகை முன்னிட்டு சீருடை, கையுரை, முகவுரை, மிதியடி, சூ, தலைப்பாகை போன்ற பொருட்கள் வாங்கி வழங்கவும், இதை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான (SIDCO) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் அம்பத்துார் சென்னை என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.5.00 (ஐந்து இலட்சத்திற்கு) மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2912/2019/எச்1, நாள்.30.12.2019)

004. வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவில் பயன்படுத்தி வரும் கணினி (CPU) பழுது ஏற்பட்டுள்ளதை நிர்வாக நலன் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் சரிசெய்து கொள்ளவும், அதற்கான தோராய செநனம் ரூ.22000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் பதிவு செய்யலாம்.
அவசரம் அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவினம் செலவினம் மேற்கொள்ளவும், தோராய செலவினம் ரூ.22000/– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.1109/2019/எச்1, நாள்.10.01.2020)

005. வந்தவாசி நகராட்சி பகுதியில் டெங்கு நோய் தடுப்பு மற்றும் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழிக்க தொற்று நோய் பெருந்தாக்க அளவில் தோன்றா வண்ணம் துரிதபடுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4414/2019/பா2, நாள்.3.1.2020 மற்றும் துணை இயக்குநர் சுகாதார பணிகள் செய்யார் அவர்களின் செயல்முறை ந.க.எண்.2833/இ4/2013, நாள்.09.1.2020ன் படி இந்நகராட்சி செயல்முறை ந.க.எண்.1530/2020/எச்1, நாள்.13.01.2020ன்படி டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணியாளர்களை 3.1.2020 முதல் 31.01.2020 வரை 28 நாட்களுக்கு பணி அமர்த்தி கொள்ளவும், இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.250/— வீதம் கூலி வழங்கவும் அதற்கு உண்டான தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு( Two lakh fifty thousand only) மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு—**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1530/2017/எச்1, நாள்.14.01.2020)